# தன்னாட்சி

*(உள்ளாட்சி உங்களாட்சி)*

69, அங்கப்ப நாயக்கன் தெரு, சென்னை-600001. மின்னஞ்சல் : thannatchi@gmail.com

**க.சரவணன்**
**தலைவர்**
**97512 37734**

**எஸ்.நந்தகுமார்**
**பொதுச் செயலாளர்**
**90032 32058**

---

**01.05.2019**

## மே 1 கிராமசபைக் கூட்டத்தை ரத்து செய்தது சரியா?

ஒவ்வொரு முறை கிராம சபைக் கூட்டத்தின் போதும், 'ஏழு நாட்களுக்கு முன்பு முறையாக அறிவிப்பு கொடுக்கப்பட்டதா, கிராமசபைக் கூட்ட விவாத பொருள் பட்டியல் வெளியிடப்பட்டு விட்டதா?' எனத் தொடர்ந்து கண்காணித்து வரும் பல சமூக ஆர்வலர்களுக்கு, இம்முறை மே மாதம் 1 ஆம் தேதி கிராமசபைக் கூட்டம் நடைபெறுமா நடைபெறாதா என்ற மிகப்பெரிய குழப்பம் தொடர்ந்து நீடித்து வந்தது. 2019 பொதுத் தேர்தல் தமிழகத்தில் ஏப்ரல் 18-ஆம் தேதி நடந்து முடிந்துள்ளதாலும், மே 19 ஆம் தேதி நான்கு சட்டமன்றத் தொகுதி இடைத்தேர்தல்கள் நடைபெற இருப்பதாலும், மே 23 ஆம் தேதி தேர்தல் முடிவுகள் அறிவிக்கப்பட இருப்பதாலும், மே 1ஆம் தேதி கிராம சபை கூட்டம், தேர்தல் நடத்தை விதிமுறைகள் காரணமாக ரத்து செய்யப்பட்டு வேறு ஒரு தேதிக்கு ஒத்திவைக்கப்படும் என்ற கருத்து பரவலாக நிலவி வந்தது.

இந்நிலையில் 29.04.2019 அன்று, கிராம சபைக்கு இரண்டு நாட்களுக்கு முன்பாக விழுப்புரம் மாவட்ட, உதவி இயக்குநர் (ஊராட்சிகள்) அவர்களிடமிருந்து சம்பந்தப்பட்ட வட்டார வளர்ச்சி அலுவலர்களுக்கு அனுப்பப்பட்ட கடிதத்தில் [பிற்சேர்க்கை-1], இயக்குநர் (ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை) அவர்கள் தொலைப்பேசி வாயிலாகத் தெரிவித்ததன் அடிப்படையில், மே 1 கிராம சபை கூட்டம் ரத்து செய்யப்பட்டு வேறு நாட்களில் நடைபெறும் என குறிப்பிட்டு இருக்கிறார்கள். அதே தேதியிட்ட ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித்துறை இயக்குநர் வெளியிட்டுள்ள அறிக்கையிலும் தேர்தல் நடத்தை விதிகள் அமுலில் இருப்பதைக் காரணம் காட்டி, மே 1 கிராமசபை கூட்டம் ரத்து செய்யப்படுகிறது என்றும், மீண்டும் எந்த தேதியில் நடைபெறும் எனப் பின்னர் அறிவிக்கப்படும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது [பிற்சேர்க்கை-2].

இது மிகவும் அதிர்ச்சித் தரத்தக்க ஒரு செய்தியாகும். ஏழு நாட்களுக்கு முன்பு சட்டப்படி அறிவிப்பு கொடுக்க வேண்டுமென இருக்கக்கூடிய கிராமசபை கூட்டம், ரத்து செய்யப்படுகிறது என்பதை வெறும் இரண்டு

நாட்களுக்கு முன்னர் தெரிவித்திருப்பது ஜனநாயக அமைப்பான கிராம சபையின் முக்கியத்துவம் கருதாமல் அரசு இயங்குகிறது என்பதையே காட்டுகிறது. தேர்தலின் போது கிராமசபை ரத்து செய்யப்படுவது தமிழகத்தில் தொடர்ந்து நடைபெறுகிறது. கடந்த 2009 ஆம் ஆண்டு பொதுத் தேர்தலின்போது, தமிழகத்தில் மே 18 அன்று பொதுத் தேர்தல் நடைபெற்றதால், அவ்வாண்டு மே 1ஆம் தேதி கிராமசபைக் கூட்டம் ரத்து செய்யப்பட்டு வேறொரு தேதியில் நடத்தப்படும் என அன்றைய ஊரக வளர்ச்சி மற்றும் பஞ்சாயத்து ராஜ் துறைச் செயலர், 18.05.2009 தேதியிட்ட அறிவிப்பில் தெரிவித்திருந்தார் [பிற்சேர்க்கை-3].

தேர்தல் விதிமுறைகள் கிராமசபைக் கூட்டம் நடைபெறாமல் தடுக்குமா என்றால், அது அவ்வாறு இல்லை என்கிறது இந்திய தேர்தல் ஆணையத்தின் ஓர் சுற்றறிக்கை. கடந்த ஆண்டு, ஐந்து மாநிலங்களின் பொதுத் தேர்தல் நடந்த போது, 10.10.2018 ஆம் தேதி, இந்தியத் தேர்தல் ஆணையத்திடம் இருந்து இந்திய பஞ்சாயத்து ராஜ் துறை அமைச்சகத்தின் செயலாளர் அவர்களுக்கு அனுப்பப்பட்டக் கடிதத்தில் குறிப்பிடப்பட்டிருக்கும் செய்தி, நாம் கவனிக்க வேண்டிய ஒன்று. காரணம், அதில் தேர்தலின்போது, தேர்தல் நடத்தை விதிகளின்படி கிராமசபைக் கூட்டங்கள் நடத்தத் தடை இல்லை என்றும், ஆனால் புதியத் திட்டங்களை அறிவிப்பது, ஆளும் கட்சின் சாதனைகளை விளம்பரப்படுத்துவது ஆகியவற்றை அங்கு செய்யக்கூடாது என்றும் குறிப்பிடப்பட்டுள்ளது. மேலும் எப்பொழுதும் நடைபெறும் செயல்பாடுகள் மற்றும் அது தொடர்பான முடிவுகள் மட்டுமே எடுக்கப்படவேண்டும் எனவும் அந்தக் கடிதத்தில் தெளிவாகக் குறிப்பிடப்பட்டிருப்பதை நாம் பார்க்க முடிகிறது. அப்படியிருக்க, தமிழக அரசு மே 1 கிராமசபைக் கூட்டத்தை ரத்து செய்து, மறு தேதிக்கு ஒத்தி வைத்தது ஏன் என்ற கேள்வி எழுகிறது.

இந்திய அரசியலமைப்பு சட்டம் பகுதி 9 மற்றும் தமிழ்நாடு ஊராட்சிகள் சட்டம் 1994 ஆகியவற்றின் அடிப்படையில் கிராமசபை கூட்டம் நடத்துவது குறித்து வரையறுக்கப்பட்டுள்ளது. தமிழக அரசின் 19.11.1998 தேதியிட்ட அரசாணை நிலை எண். 245, ஒவ்வொரு காலாண்டிற்கும் கிராமசபைக் கூட்டம் நடத்துவது- ஜனவரி 1, மே 1, ஆகஸ்ட் 15, அக்டோபர் 2 ஆகிய தேதிகளில் நடத்துவது என அரசு முடிவெடுத்தது. தமிழகத்தைப் பொருத்தவரை கிராமசபை விவாதப்பொருட்கள் தயாரிப்பது முதல் அதை நடத்தலாமா வேண்டாமா என்பது வரை மாநில அரசே முடிவுகளை எடுக்கிறது. உள்ளாட்சிகளின் பல அடிப்படை உரிமைகளைக் கூட மாநில அரசு தனது கைகளில் வைத்திருக்கிறது. சுயாட்சி அரசுகளாக இயங்கவேண்டிய உள்ளாட்சி அரசாங்கங்கள், தன் விருப்பத்தின்படியே இயங்கவேண்டுமென மாநில அரசு நினைக்கிறது. உள்ளாட்சி அரசுகள் சுயமாக முடிவெடுக்கத் தமிழக அரசு அனுமதிப்பதில்லை.

தற்போதைய சூழலில், கிராமசபையை நடத்தவேண்டாம் என தமிழக அரசு கருதியிருந்தாலும், உரிய காலத்திற்கு முன்பாக அறிவிப்பு வெளியிட்டிருக்க வேண்டும். இனிவரும் காலங்களில் ஜனநாயகத்தின் ஆணிவேராக இருக்கும் கிராமசபைக் குறித்து அரசு உரியக் கவனத்துடன் நடந்து கொள்ள வேண்டும்; உள்ளாட்சி ஜனநாயகத்தின் கண்ணியத்தைக் காக்க வேண்டும். உள்ளாட்சி அரசுகளைக் கிள்ளுக் கீரையாக நினைக்காமல், ஆலமரமாக வளர்த்தெடுக்க வேண்டிய பொறுப்பு அரசுக்கு உள்ளது.





(க. சரவணன்)

(எஸ். நந்தகுமார்)

பொதுச் செயலாளர்

## பிற்சேர்க்கை-1



ந.க.எண் : அ4/512/2019
நாள் : 29.04.2019

உதவி இயக்குநர் (ஊராட்சிகள்)
அலுவலகம், விழுப்புரம்.

**அவசரக் குறிப்பாணை**

பொருள் : விழுப்புரம் மாவட்டம் – கிராம சபை கூட்டம் – 2019 மே 1 தொழிலாளர் தினத்தை முன்னிட்டு நடைபெறவிருக்கும் கிராமசபை கூட்டம் ஒத்தி வைத்தல் – தொடர்பாக

பார்வை : இயக்குநர் ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித்துறை, சென்னை அவர்களின் தொலைபேசி செய்தி, நாள்:29.04.2019

பார்வையில் காணும் தொலைபேசி செய்தியில் விழுப்புரம் மாவட்டத்தில் உள்ள அனைத்து ஊராட்சி ஒன்றியங்களிலும் 2019 மே 1 தொழிலாளர் தினத்தன்று நடைபெறவிருந்த கிராமசபை கூட்டம் ஒத்தி வைக்கப்படுவதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேலும் எந்தவொரு ஊராட்சியிலும் கிராமசபை கூட்டம் நடத்தக்கூடாது என்பது இதன் மூலம் அறிவுறுத்தப்படுகிறது. பாராளுமன்ற பொதுத்தேர்தல் விதிமுறைகள் நடைமுறையில் உள்ளதால் கிராமசபை கூட்டம் நடைபெறும் தேதி பின்னர் அறிவிக்கப்படும். அனைத்து வட்டார வளர்ச்சி அலுவலர்களும் சம்மந்தப்பட்ட மண்டல அலுவலர்கள் மற்றும் ஊராட்சிகளுக்கு தகவல் தெரிவிக்குமாறு அறிவுறுத்தப்படுகிறது.

ஒம்/–இரா.ஜோதி
உதவி இயக்குநர் (ஊராட்சிகள்),
விழுப்புரம்.

பெறுநர்
அனைத்து வட்டார வளர்ச்சி அலுவலர்கள் (கி.ஊ/வ.ஊ),
விழுப்புரம் மாவட்டம்.

/உ.நு.உ.ப/

துணை வட்டார வளர்ச்சி அலுவலர் /
கணக்கர்.

**பிற்சேர்க்கை-2**

भारत निर्वाचन आयोग सचिवालय

**SECRETARIAT OF THE ELECTION COMMISSION OF INDIA**

निर्वाचन सदन, अशोक रोड, नई दिल्ली-110001

Nirvachan Sadan, Ashoka Road, New Delhi-110001.

No. **437/6/CG/LA-Multi/ECI/ LET/FUNCT/MCC/2018** **Dated: 10th October, 2018**

To

Sh. Amarjeet Sinha,
Secretary,
Government of India,
Ministry of Panchayat Raj,
Krishi Bhawan,
New Delhi-110001.

Subject: - Holding the meeting of Gram Sabha on Gram Panchayat Development Plan - regarding.

Sir,

I am directed to refer to your D.O. letter No. 11015/222/2018-CB, dated 4th October, 2018, on the subject cited, and to state that the Commission has no objection, from MCC angle, for holding the meetings of Gram Sabha in the poll going States subject to the condition that no new policy decisions and announcements shall be made in such meetings till the elections are over and only the decisions related to routine day-to-day management issues, and on emergency issues may be taken in such meetings.

Further, the meetings shall not be used for giving publicity to achievements of the Union Govt. and the Govts. of poll going States.

Yours faithfully,

**(NARENDRA N. BUTOLIA)**
**PRINCIPAL SECRETARY**

## சுருக்கம்

கிராம சபைக் கூட்டம் – 1.5.2009 தொழிலாளர் தினம் அன்று கிராம சபைக் கூட்டம்– ஒத்திவைப்பு – 13.5.2009 அன்று பாராளுமன்ற தேர்தல் – பிறிதொரு தினம் கிராம சபைக் கூட்டம் நடத்த – ஆணை வெளியிடப்படுகிறது.

---

ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் (ஊ2) துறை

அரசாணை (ப) எண். 268

நாள். 18.5.2009

படிக்க:

1. அரசு ஆணை(நிலை) எண்.245, ஊரக வளர்ச்சி (சி1) துறை, நாள்.19.11.1998.
2. அரசு ஆணை (நிலை) எண்.130, ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை, நாள்.25.9.2006.
3. அரசு ஆணை (ப) எண்.642, ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் (ஊ4) துறை, நாள்.3.11.2006.
4. ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி ஆணையரின் கடிதம் ஆர்.சி.எண்.32563/09/பரா.1 II-2, நாள்.24.4.2009.

*****

**ஆணை:**

தமிழ்நாட்டில் கிராம சபைக் கூட்டம் தேசிய விடுமுறை நாட்களான ஜனவரி 26 (குடியரசு தினம்), மே 1 (தொழிலாளர் தினம்), ஆகஸ்டு 15 (சுதந்திர தினம்), மற்றும் அக்டோபர் 2 (காந்தி பிறந்த தினம்) ஆகிய நான்கு நாட்களுக்கு (ஒரு ஆண்டில் 4 நாட்கள்) நடத்தப்பட வேண்டும் என்றும், ஒவ்வொரு கூட்டத்திலும் என்னென்ன பொருட்கள் விவாதத்திற்கு எடுத்துக் கொள்ளப்பட வேண்டும் என்றும் படிக்கப்பட்ட 1 மற்றும் 2–ல் உள்ள ஆணைகளில் ஆணைகள் பிறப்பிக்கப்பட்டுள்ளன.

2. தமிழகத்தில், 13.5.2009 அன்று பாராளுமன்ற தேர்தல் நடத்துவது தொடர்பாக மாநில தேர்தல் ஆணையம் அறிவிப்பு வெளியிடப்பட்டுள்ளதைத் தொடர்ந்து, 1.5.2009 அன்று அனைத்து ஊராட்சிகளிலும் நடத்தப்பட வேண்டிய கிராம சபைக் கூட்டத்தினை, 13.5.2009 அன்று நடைபெற உள்ள பாராளுமன்ற தேர்தல் முடிவு பெறும் வரை தள்ளிவைக்கலாம் என ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி ஆணையர் படிக்கப்பட்ட 4–ல் காணும் கடிதத்தில் கேட்டுக் கொண்டுள்ளார்.

3. மேலே பத்தி 2–ல் கூறப்பட்டுள்ளதன் அடிப்படையில், 1.5.2009 அன்று அனைத்து கிராம ஊராட்சிகளிலும் நடைபெற வேண்டிய கிராம சபைக் கூட்டத்தினை, 2009–ஆம் ஆண்டு பாராளுமன்ற தேர்தல் முடிவுபெற்ற பின்னர் பிறிதொரு தேதியில் நடத்த, அனைத்து மாவட்ட ஆட்சித் தலைவர்களையும் அறிவுறுத்துமாறு ஆணையர், ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி அவர்களுக்கு அரசு ஆணையிடுகிறது.

(ஆளுநரின் ஆணைப்படி)

க.அஷோக் வர்தன் ஷெட்டி,
அரசு முதன்மைச் செயலாளர்.

பெறுநர்

ஆணையர்,
ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி, சென்னை–15

நகல்:

அனைத்து மாவட்ட ஆட்சியர்கள்,
(சென்னை மாவட்டம் நீங்கலாக)
மாண்புமிகு அமைச்சர் (ஊ.வ.(ம)உ) அவர்களின்
சிறப்பு நேர்முக உதவியாளர், சென்னை–9.

//ஆணைப்படி அனுப்பப்படுகிறது //

பிரிவு அலுவலர்.

21/5/09.